கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 19ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.20/2025
இன்
அசல் வழக்கு எண்.299/2014
-----

முருகேசன் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1) பொது மேலாளர்(நிதி),
GHCL Textiles Limited,
திண்டுக்கல் ரோடு, பரவை, மதுரை.
2) ரவிச்சந்திரன்
3) வெங்கடேஷ்
4) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்,
திருப்பரங்குன்றம், மதுரை.
5) தமிழக அரசிற்காக அதன் மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் வளாகம், மதுரை.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 11.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் திரு.A.தமிழ்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஸ்ரீதர் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.தங்கசாமி அவர்கள் ஆஜராகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும்,

இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டி இந்த நிர் 1ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை வழங்கி, மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்திட உத்தரவிட வேண்டி விதி 75 crp படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :

தாவா வழக்கிடை சொத்து உள்ளிட்ட இதர நிலங்களுக்கு பிளாட் போடப்பட்டுள்ளதாகவும், அதற்கு வரைபடம் உள்ளதாகவும், 1ம் பிரதிவாதி கூறிய நிலையில், தாவா சொத்திற்கான வரைபடம் மற்றும் மில் தொழிலாளர்கள் வீட்டின் பின்புறம் உள்ள 10அடி காலி இடத்தை 25 நபர்களுக்கு வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாகவும், அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் கூறியுள்ள நிலையில், மேற்படி 25 நபர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் அவர்களது பெயர் பட்டியல் தாவா சொத்து பத்திரம் பதிந்தது சம்பந்தமாக பதியப்பட்ட குற்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் 20.03.2004, 21.03.2004 ஆகிய தேதிகளில் 1ம் பிரதிவாதி நிர்வாகத்திற்கும், குடியிருப்போர் தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற சமாதானக் கூட்ட தீர்மானம் உள்ளிட்ட ஆவணங்கள் 1ம் பிரதிவாதி வசம் உள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு மிகவும் அவசியமானது என்றும், எனவே வழக்கு சம்பந்தப்பட்ட

ஆவணங்களை நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டி இந்த நிர் 1ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை வழங்கி, மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்திட உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>** :

5. அசல் மனுவானது 1ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை வழங்கி, இந்நீதிமன்றத்தில் ஆவணங்களை ஒப்படைத்திட உத்திரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இம்மனுவை பரிசீலனை செய்ததில், இம்மனுவானது உரிய சட்ட வழிகளை பின்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், உரிய முறையில் இம்மனு வடிவமைக்கப்படவில்லை. 1ம் பிரதிவாதி அரசு அலுவலராகவோ, அதிகாரி ஆகவோ இல்லாத நிலையில், இம்மனு விதி 75 உரிமையியல் நடைமுறை விதியின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது சட்டப்படியானதாக இல்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுவில் கூறியுள்ள ஆவணங்களானது வழக்கிற்கு சம்மந்தமில்லா ஆவணங்கள் என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள 1ம் பிரதிவாதி, பொதுமேலாளரை சாட்சியாக விசாரணை செய்வதற்கான

சட்டப்படியான வழிமுறைகளை பின்பற்றி இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை என்பதை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நிதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.19 16:53:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

__இணைப்பு:__

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.19 16:53:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 20 /2025
அசல் வழக்கு எண்.299/2014
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 19.11.2025